# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - நீரியல் சுழற்சி முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

26 x 1 = 26

1) நீர் கடலிலிருந்து, வளிமண்டலத்திற்கும், வளிமண்டலத்திலிருந்து நிலத்திற்கும், மீண்டும் நிலத்திலிருந்து கடலுக்குச் செல்லும் முறைக்கு ________ என்று பெயர்.

(அ) ஆற்றின் சுழற்சி **(ஆ) நீரின் சுழற்சி** (இ) பாறைச் சுழற்சி (ஈ) வாழ்க்கைச் சுழற்சி

2) புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம் ________ .

(அ) 71% (ஆ) 97% **(இ) 2.8%** (ஈ) 0.6%

3) நீர், மண்ணின் இரண்டாவது அடுக்கிலிருந்து அல்லது புவியின் மேற்பரப்பு வழியாக ஆறுகளிலும், ஓடைகளிலும், ஏரிகளிலும், பெருங்கடலுக்குச் செல்லும் முறைக்கு ________.

(அ) ஆவி சுருங்குதல் (ஆ) ஆவியாதல் (இ) நீர் உட்கசிந்து வெளியிடுதல் **(ஈ) நீர் வழிந்தோடல்**

4) நீர் தாவரங்களின் இலைகளிலிருந்து நீராவியாக மாறுவதற்கு ________ என்று அழைக்கின்றனர்.

**(அ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்** (ஆ) நீர் சுருங்குதல் (இ) நீராவி சுருங்குதல் (ஈ) பொழிவு

5) குடிப்பதற்கு உகந்த நீரை ________ என்று அழைப்பர்.

(அ) நிலத்தடி நீர் (ஆ) மேற்பரப்பு நீர் **(இ) நன்னீர்** (ஈ) ஆர்ட்டீசியன் நீர்

6) நீர், நீராவியிலிருந்து நீராக மாறும் முறைக்கு ________ என்று பெயர்.

**(அ) ஆவி சுருங்குதல்** (ஆ) ஆவியாதல் (இ) பதங்கமாதல் (ஈ) மழை

7) புவியில் உள்ள நன்னீரில் நிலத்தடி நீரின் அளவு.

**(அ) 0.6%** (ஆ) 0.1% (இ) 0.04% (ஈ) 2.2%

8) ________ ஆவியாதலின் எதிர்வினைச் செயலாகும்.

(அ) நீர் உட்கசிதல் **(ஆ) நீர் சுருங்குதல்** (இ) நீர் ஊடுருவல் (ஈ) நீர் வழிந்தோடல்

9) பொருட்களின் வெப்பநிலை பனிநிலையின் வெப்பநிலையை விடக் குறைவாக இருக்கும் பொழுது ________ உருவாகிறது.

(அ) உறைபனி (ஆ) மூடுபனி (இ) அடர்மூடுபனி **(ஈ) பனி**

10) மழைத்துளியின் விட்டமானது 0.5 மி.மீ. அளவினை விட அதிகமாக இருப்பின், அதனை ________ மழை என்கிறோம்.

**(அ) உறை பனி** (ஆ) கல் மழை (இ) ஆலங்கட்டி மழை (ஈ) பனி மழை

11) ________ புவியின் மேற்பரப்பு நீரால் சூழப்பட்டுள்ளது.

**(அ) 71%** (ஆ) 92.2% (இ) 75% (ஈ) 90%

12) நீர், திரவ நிலையிலிருந்து வாயு நிலைக்கு மாறும் செயல்.

(அ) ஆவியீர்ப்பு (ஆ) சுருங்குதல் **(இ) ஆவியாதல்** (ஈ) பொழிவு

13) ஆவியாதலின் விகிதத்தை பாதிக்கும் முக்கியக் காரணி

(அ) மழை (ஆ) பனி (இ) காற்று **(ஈ) வெப்பம்**

14) ஆவியாதல் அதிகமாகவும், பொழிவு குறைவாகவும் உள்ள பகுதி.

(அ) நிலப்பாப்ப **(ஆ) போாமிகள்** (இ) பாலைவனம் (ஈ) மலைக் கொடர்

15) நீராவி, நீராக மாறும் செயல்முறை

**(அ) சுருங்குதல்** (ஆ) ஆவியாதல் (இ) ஆவியீர்ப்பு (ஈ) உட்கசிதல்

16) குளிர்ந்த பொருட்களின் மேற்பரப்புகளின் மீது நீராவி படிந்து பனிப் படிகங்களாக மாறுவது

**(அ) உறைபனி** (ஆ) மூடுபனி (இ) அடர் மூடுபனி (ஈ) பனி

17) வெப்பநிலை குறையும் பொழுது பூரித நிலையை அடைவது.

(அ) நீர் (ஆ) நிலம் **(இ) காற்று** (ஈ) மண்

18) நீர்த்துளிகள் 0.5 மி.மீட்டருக்கும் குறைவாக இருந்தால் அதை __________என்கிறோம்.

(அ) மழை **(ஆ) தூறல்** (இ) கல் மழை (ஈ) ஆலங்கட்டி மழை

19) செறிவூட்டப்பட்ட பகுதியிலிருந்து செறிவூட்டப்படாத பகுதிக்குச் செல்லும் நீரோட்டம்

**(அ) நீர் உட்கசிதல்** (ஆ) நிலத்தடி நீர் (இ) நீரூற்று (ஈ) பனியாறு

20) இந்தியாவில் நீர்வளம் ___________ ஆதாரங்களிலிருந்து கிடைக்கிறது.

(அ) இரண்டு **(ஆ) மூன்று** (இ) நான்கு (ஈ) ஆறு

21) நீர் திரவநிலையிலிருந்து வாயுநிலைக்கு மாறுவதற்கு _____________ என்று பெயர்.

**(அ) ஆவியீர்ப்பு** (ஆ) நீர் ஊடுருவல் (இ) ஆவியாதல் (ஈ) உட்கசிதல்

22) ________________ வெப்பநிலையிலேயே ஆவியாகத் தொடங்குகிறது.

(அ) 10 **(ஆ) 0** (இ) 15 (ஈ) -10

23) ____________ என்பது தாவரங்களில் உள்ள நீர் ஆவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலாக்கம் ஆகும்.

(அ) நீர் சுருங்குதல் **(ஆ) நீர் உட்கசிந்து வெளியிடுதல்** (இ) ஆவியீர்ப்பு (ஈ) நீர் ஆவியாதல்

24) ஆவியாதல் விகிதம் அதிகரிக்க காரணம் _______________

(அ) காற்றின் வேகம் அதிகரிக்கும் பொழுது (ஆ) வெப்பநிலை அதிகரிக்கும் பொழுது

(இ) ஈரப்பதம் குறையும் பொழுது **(ஈ) மேற்கூறிய அனைத்தும்**

25) அடர் மூடுபனியின் உயரம் 10கி.மீட்டர் அல்லது அதற்கு குறைவான உயரம் ___________ போக்குவரத்திற்கு உகந்தது.

**(அ) விமான** (ஆ) சாலை (இ) கடல் (ஈ) தரை

26) _____________ வெப்பநிலையில் நீர் கொதிக்கின்றது.

**(அ) 100°** (ஆ) 80° (இ) 60° (ஈ) 40°

**<u>சரியா தவறா என எழுதுக</u>** 8 x 1 = 8

27) 212°F வெப்பநிலையில் நீர் கொதிக்கிறது, ஆனால் 32°F வெப்பநிலையில் ஆவியாக ஆரம்பிக்கிறது.

**பதில் :** சரி

28) மூடுபனி எனப்படுவது காற்றில் தொங்கு நிலையில் மிதக்கும் நுண்ணிய நீர் துளிகளைப் பெற்றிருப்பதில்லை.

**பதில் :** தவறு

29) அடிப்பரப்பு நீர் வழிந்தோடல் பொதுவாக இடை நீர் ஓட்டம் எனக் குறிப்பிடப்படுகிறது.

**பதில் :** சரி

30) புவியில் உள்ள பெரும் பகுதியிலான நீர் நன்னீர் ஆகும்.

**பதில் :** தவறு

31) புவியில் கிடைக்கப்பெறும் நீரானது ஒரே சீராக இருப்பதில்லை.

**பதில் :** சரி

32) நீர் வளமானது. சில இடங்களில் அதிகமாகவும், சில இடங்களில் மிக குறைவாகவும் உள்ளது.

**பதில் :** சரி

33) நிலப்பரப்பில் ஆவியாதல் அதிகமாகவும், பொழிவு குறைவாகவும் உள்ளது.

**பதில் :** தவறு

34) நீர்த்துளிகள் புவியின் மேற்பரப்பில் குளிர்ந்த பொருள்களின் மீது படும்பொழுது பனி உருவாகிறது.

**பதில் :** சரி

## கோடிட்ட இடத்தை நிரப்புக

16 x 1 = 16

35) மழைத்துளியின் அளவு 0.5 மி.மீ குறைவாக இருந்தால், அம்மழை பொழிவின் பெயர் ________.

**தூறல்**

36) மூடுபனி ________ ஐ விட அதிக அடர்த்தி கொண்டது.

**அடர் மூடுபனி**

37) வளிமண்டலத்தில் உள்ள நீராவியின் அளவு __________ என்று அழைக்கப்படுகிறது.

**பதில் :** ஈரப்பதம்

38) நீர்ச் சுழற்சியில் ________ நிலைகள் உள்ளன.

**பதில் :** மூன்று

39) வளிமண்டலத்திற்கு புவியை நோக்கி விழும் எல்லா வகையான நீருக்கும் ___________ என்று பெயர்.

**பதில் :** மழைப்பொலிவு

40) _______ மூலம் மண் தற்காலிகமாக தண்ணீரைச் சேமித்து மண்ணில் உள்ள உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும் கிடைக்கச் செய்கிறது.

**நீர் ஊடுருவல்.**

41) _________ என்பது வளிமண்டலத்தில் காணப்படும் குறைந்த எடை கொண்ட மிக நுண்ணிய நீர்த்துளிகளாகும்.

**மேகங்கள்**

42) வெப்பகாற்று குளிர்ந்த காற்றைவிட அதிக ________ ஐ தக்க வைத்துக் கொள்ளும்.

**நீராவி**

43) குளிர் பிரதேசங்களில் பொழிவானது ________ அல்லது _________ ஆக இருக்கும்.

**பனி, பனிக்கட்டி**

44) பொழிவின் பொதுவான வடிவம் ________ .

**மழைப்பொழிவு**

45) புவியில் தூய நீரின் சதவிதம் ________

**பதில் :** 2.8

46) __________ என்பது உலக அளவிலான ஒரு நிகழ்வு ஆகும்.

**பதில் :** நீரியல் சுழற்சி

47) மழைநீரில் 85 சதவீதம் மட்டுமே _______ மற்றும் _______ கலக்கிறது.

**பதில் :** கடல், பேராழிகளில்

48) வெப்பநிலை குறையும் பொழுது ________ பூரித நிலையை அடைகிறது.

**பதில் :** காற்று

49) மழைப் பொழிவானது 5மி.மீ விட்டத்தை விட பெரிய உருண்டையான பனிக்கட்டிகளைக் கொண்டு இருந்தால் __________ என்று பெயர்.

**பதில் :** ஆலங்கட்டி மழை

50) ______________ ஆவியாதல் அதிகமாகவும், பொழிவு குறைவாகவும் உள்ளது.

**பதில் :** பேராழிகளில்